1974 மார்ச் 29]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தயாரிக்கப்பட்ட அபின் (போதையூட்டும் மருந்துகள்) நீங்கலாக ஏனைய மருந்துகளைத் தயாரித்தல், விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல், எடுத்துச் செல்லுதல், வைத்திருத்தல் ஆகியவை அபாயகரமான மருந்துகள் சட்டத்தைச் சேர்ந்த (மத்திய சட்டம் 1930) 8-வது பிரிவின் கீழ் இயற்றப்பட்ட தமிழ் நாடு 1932 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட மருந்துகள் விதிகளின் கீழ் முறைப்படுத்தப்படுகின்றன. இவ் விதிகளை மீறுபவர்கள் தகுந்தவாறு தண்டிக்கப்படுகின்றனர்.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether any report has been received by Government regarding the use of Narcotic Drugs in Students' Hostels in Tamil Nadu ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படிப்பட்டதொரு அறிக்கை எதுவும் இதுவரையில் வந்ததாகத் தெரியவில்லை.

New water supply scheme in Poonamallee

* 247 Q.—THIRU L. BALARAMAN (ON BEHALF OF THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any new water-supply scheme has been introduced in Poonamallee during 1973 ; and

(*b*) if so, the details thereof?

பூவிருந்தவல்லியில் புதிய நீர் வழங்குத் திட்டம்

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973-ஆம் ஆண்டில், பூவிருந்தவல்லியில், புதிய நீர் வழங்குத் திட்டம் ஏதும் கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம். பூவிருந்தவல்லி பேரூராட்சிப் பகுதிக்காக, புதியதொரு குடி நீர் வழங்கு திட்டத்தை நிறைவேற்ற அரசு 1972 மார்ச் திங்களில் நிர்வாக ஒப்புதல் வழங்கியது. அத்திட்டத்தை நிறை வேற்ற ரூ. 20.40 லட்சமும், அவற்றைப் பேணிவர ஆண்டுதோறும் ரூ. 50,000-ம் செலவாகும் என மதிப்பிடப்படுகிறது.

(இ) கூவம் ஆற்றிலிருந்து இத்திட்டத்திற்கு நீர் எடுத்துக்கொள்ளப் படும். சென்னை மாநகரின் வடக்குப் பகுதிக்கு ஒன்பது கிலோ மீட்டர் தொலைவில் ஆயச்சேரி கிராமத்திற்கருகில் இத்திட்டத்திற்கான இடம் தெரிந் தெடுக்கப்பட்டுள்ளது. கூவம் ஆற்றுப் படுகையில் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ள வடிப்புப் பணிகள் (Infiltration works) மூலம் 300 மில்லி மீட்டர் குறுக்களவும் 8,504 மீட்டர் நீளமும் உள்ள பெரிய குழாய் மூலமாக, பூவிருந்தவல்லி நகரில் உயர் மட்டத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ள நீர்த் தேக்கத்திற்கு நீரைக் கொண்டு வந்து அங்கிருந்து தேவையான நீர் எடுத்துக் கொள்ளப்படும். நீர் வழங்கும் காரியங்களுக்காக பூவிருந்தவல்லி நகரம் இரு மண்டலங்களாகப் பிரிக்கப்படும்; ஒவ்வொரு மண்டலத்திற்கும் தனி குடிநீர்த் தேக்கம் ஒன்றும், நீர் வழங்கு அமைப்பும் இருக்கும்.

பூவிருந்தவல்லி பேரூராட்சிக்கென நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 20 காலன் அல்லது 90 லிட்டர் அளவுக்கு நீர் வழங்கப்படும்; வழியிலுள்ள கிராம மக்களுக்கு, நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 10 காலன் அல்லது 45 லிட்டர் அளவுக்கு நீர் வழங்கப்படும். இத்திட்டம் குறித்த பணிகள் நடந்தேறி வருகின்றன.

Hospital Equipments Repairing Centre.

* 248 *Q.*—THIRU L. BALARAMAN (ON BEHALF OF THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Health be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 58 on 25th June 1971:—

(*a*) whether there is any proposal to have a repairing centre for repairing hospital equipments such as Electro-Cardiogram, X-ray equipment, etc., under the control of the Health Department itself; and

(*b*) if so, the details thereof?

மருத்துவமனைச் சாதனங்களைப் பழுதுபார்க்கும் நிலையம்

திரு. எல். பலராமன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எலெக்ட்ரோ-கார்டியோகிராம், எக்ஸ்-கதிர் சாதனங்கள் போன்ற மருத்துவமனைச் சாதனங்களைப் பழுது பார்ப்பதற்காக, பழுது பார்க்கும் நிலையம் ஒன்றை மக்கள் நல்வாழ்வுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் நிறுவு வதற்கான செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?